இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத் தெரியும். தம்மால் முன்பே தேர்ந்துகொள்ளப் பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்றவாறு இருக்க வேண்டுமெனக் கடவுள் முன்குறித்து வைத்தார்; அச்சகோதரர் சகோதரிகள் பலருள் தம் மகன் தலைப்பேறானவராய் இருக்க வேண்டுமென்றே இப்படிச் செய்தார். (உரோ 8: 28-30)

# மலாக்கா- ஜோகூர் மறைமாவட்டத்தில் திருத்தைலத் திருப்பலி கொண்டாட்டம்

**ஜோகூர் பாரு:** கடந்த ஜூலை 14 மாலை, மலாக்கா- ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயரும் அருட்பணியாளர்களும் பொது நடமாட்டக்கட்டுப்பாட்டு ஆணை தளர்வுக்குப் பின், 2 நாள் மாத ஒன்றுகூடல் நிகழ்வில், முதல் முறையாக மஜோடி மையத்தில் இணைந்தனர்.

அன்று மாலை 6 மணியளவில் மஜோடி மண்டபத்தில் பாதுகாப்பான இடைவெளி மற்றும் நிர்ணயிக்கப்பட்ட பணி நெறிமுறை களுக்கு (SOP) ஏற்ப திருப்பலி ஆயர் பெர்னார்ட் பவுல் மற்றும் குருமுதல்வர்கள் அருட்தந்தை பீட்டர் இங் மற்றும் அருட்தந்தை மைக்கேல் மன்னாயகம், மற்றும் திருத்தொண்டர்கள் கில்பர்ட் ஜேம்ஸ் மற்றும் லெஸ்லி பெட்ரூஸ் ஆகியோர் உடனிருக்கக் கொண்டாடப் பட்டது. ஓய்வுப் பெற்ற ஆயர்களான ஜேம்ஸ் சான் மற்றும் போல் தான் ஆகியோரும் இத்திருப்பலியில் உடனிருந் தனர்.



இந்த ஒன்றுகூடலுக்கு முன்பாக மறைமாவட்டத்தின் பொன்விழாவை (50 - வது ஆண்டுவிழா) கொண்டாட்டத்தைத் தொடக்கி வைக்கும் விழாவில் அருட்பணியாளர்கள் கடைசியாக மலாக் காவில் உள்ள செயின்ட் பவுல் குன்றில் ஒன்று கூடியதை ஆயர் பெர்னார்ட் பவுல் நினைவு கூர்ந்தார்.

திருத்தைலத் திருப்பலியோடு நடைபெற்ற அந்த முதல் கூட்டம் மிகவும் முக்கிய மானது என்று ஆயர் கூறினார், ஏனெனில் இது ஒரு புதிய தொடக்கத்திற்கான அழைப்பு, புதிய வாக்குறுதியுடனும் புதிய எண்ணெய்களின் ஆசீர்வாதத்துடனும் தொடங்குகிறது என்றார். ஆண்டவரு டைய தயவால் அனைத்தும் சிறப்பாக நடைபெறுவதாக ஆயர் மேலும் கூறினார்.

திருத்தைலத் திருப்பலியோடு தொடங்கும் இந்த ஒன்றுகூடல் குறிப்பாக அருட் பணியாளர்களுக்கு ஒரு புதியத் தொடக் கமாகவும், கடவுளின் தயவு உடனிருப்பதை இது உணர்த்தும் கொண்டாட்டமாகவும் அமைகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் ஆயர், அவரது மறையுரையில், அருட்பணியாளர்கள் அனைவருக்கும் பங்குகளில் அருட்சாதனக் கொண்டாட் டங்களுக்குத் திரும்பும் இக்காலக்கட்டத் தில், உற்சாகத்துடனான அர்ப்பணிப் புடனும் வாக்குறுதியோடும், புதிய கிறிஸ்து, புதிய தேவைகள் என திருப்பணியைத் தொடங்க இந்த திருத்தைலத் திருப்பலி வழிவகுப்பதாக ஆயர் பெர்ணர்ட் தொடந்துப் பகிர்ந்துகொண்டார்.

இறுதியாக, “எல்லாம் வல்ல கடவுள் உங்களோடு உடனிருக்கிறார், அவர் வெளியில் இல்லை” என்றும், “திருப்பணி களை நம்பிக்கையோடும், எதிர்நோக் கோடும், அன்போடும் ஆற்ற வேண்டும்” என அருட்பணியாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

# திருத்தந்தையரின் தலைமைத்துவமும் தவறாவரமும் 150-ஆம் ஆண்டு நிறைவு

**வத்திக்கான்**: உலகளாவிய திருஅவையில் திருத்தந்தையரின் தலைமைத்துவம், திருத்தந்தையரின் அதிகாரப்பூர்வ அறிக்கைகளின் தவறாவரம் ஆகியவை குறித்த கோட்பாடுகள், முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் அங்கீ கரிக்கப்பட்டதன் 150-ஆம் ஆண்டு நிறைவு, ஜூலை 18, கடந்த சனிக்கிழமையன்று நினைவுகூரப்பட்டது.

1869-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ஆம் தேதி துவங்கிய இந்த முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில், நீண்ட நேரம் இடம்பெற்ற விவாதத்திற்குப் பின், இந்த இரு கோட்பாடுகளும் நிறை வேற்றப்பட்டன. இந்த இரு கோட் பாடுகளை விவரிக்கும் Pastor Aeternus என்ற கொள்கை விளக்கம், 1870-ஆம் ஆண்டு ஜூலை 18ம் தேதி வெளியிடப் பட்டது.

இது வெளியிடப்பட்ட 150-ஆம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் இவ்வேளையில், அந்த கோட்பாடுகள் திருஅவைக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை, வத்திக்கான் செய்தித்துறை விரிவாக அலசியுள்ளது.

திருத்தந்தை புனித 6-ஆம் பவுல் அவர்கள், 1969-ஆம் ஆண்டில் பொது மறைக் கல்வியுரையில் கூறியதுபோன்று, இந்த கொள்கை விளக்கம், நீண்ட, தீவிர உணர்வு நிறைந்த, மற்றும், மிகக் கடுமையான வாக்குவாதங்கள் இடம் பெற்றபின், அதில் பங்குகொண்ட 535 பொதுச்சங்கத் தந்தையரால் ஒரே மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், இந்த



வாக்கெடுப்பில் 83 பொதுச்சங்கத் தந்தையர் பங்கெடுக்க வில்லை.

Pastor Aeternus என்ற கொள்கை விளக்கத்தில், திருத்தந்தை 9-ஆம் பயஸ் அவர்கள், திருத்தந்தையரின் தலைமைத் துவம் பற்றிய கோட்பாட்டை அறிவிப் பதற்குமுன், நாம் இருவரும் ஒன்றாய் இருப்பதுபோன்று, தம் சீடர்களும் ஒன்றாய் இருக்குமாறு, இயேசு தம் இறுதி இரவு உணவில் தம் இறைத் தந்தையிடம் செபித்ததைக் குறிப்பிட்டார்.

திருத்தூதர் பேதுருவும், அவரின் வழிவருபவர்களும், திருஅவை ஒன்றிப்பில் காணக்கூடிய அடித்தளம் என்றும் கூறிய திருத்தந்தை 9-ஆம் பயஸ் அவர்கள், திருத்தந்தையரின் அதிகாரப்பூர்வ அறிக் கைகளின் தவறாவரம் பற்றிக் கூறுகையில், இந்த அதிகாரம், அனைவரின் மீட்புக்காக, திருத்தூதர் பேதுரு மற்றும், அவரின் வழிவருபவர்களுக்கு வழங்கப்பட்டது என்று விளக்கினார்.

திருத்தந்தை 9-ஆம் பயஸ் அவர்கள், 1912-ஆம் ஆண்டு, பொது மறைக்கல்வி யுரையில் கூறுகையில், இந்த இரு கோட்பாடுகளையும் கடந்து, அனைவரும், திருத்தந்தையரை அன்புகூரவேண்டும் மற்றும், அவர்களுக்கு கீழ்ப்படியவேண்டும், இவ்வாறு இடம்பெறவில்லையெனில், தான் மிகவும் வேதனையடைவதாகக் கூறினார்.

முன்னாள் திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் அவர்கள், 2006-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் தேதி போலந்து நாட்டின் கிரக்கோவ் நகரில் சந்தித்தபோது, திருஅவை மீதும், திருஅவையோடும் உங்கள் வாழ்வைக் கட்டியெழுப்ப அஞ்சவேண்டாம் என்றும், திருத்தூதர் பேதுரு மற்றும், அவரிடம் ஒப்படைக்கப் பட்ட திருஅவையை அன்புகூர்வது குறித்து நீங்கள் அனைவரும் பெருமிதம் கொள்ளுங்கள் என்றும் கூறினார்.

திருத்தந்தை 9-ஆம் பயஸ் அவர்களால் கூட்டப்பட்ட முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கம், 1869-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் தேதி முதல் 1870-ஆம் ஆண்டு அக்டோபர் 20-ஆம் தேதி வரை நடைபெற்றது. திரிதெந்தின் பொதுச்சங் கத்திற்குப்பின், மூன்று நூற்றாண்டுகள் சென்று நடைபெற்ற இந்தப் பொதுச்சங்கம், திருத்தந்தை யரின் தவறாவரம் குறித்து தெளிவான விளக்கம் அளித்தது. இதில் 744 திருஅவை உறுப்பினர்கள் பங்குபெற்றனர்.

# கொரோனா கிருமியுடன் போராட போர் நிறுத்தங்கள் தேவை

**வத்திக்கான்:** இலட்சக்கணக்கான உயிர்களைக் கொன்றுள்ள கொரோனா தொற்றுக்கிருமியுடன் போராடி வெற்றி பெறுவதற்கு, மக்களின் உயிர்களைப் பலிவாங்கும் போர்கள் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும் எனத் திருத்தந்தை வலியுறுத்தியுள்ளார்,

புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்தோருக்கு, ஜூலை 19, ஞாயிறன்று, மூவேளை செப உரை வழங்கியபின், உலகெங்கும் கொரோனா கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் உயிரிழந்தோர் அனைவருடன், குறிப்பாக, இந்தக் கொள்ளை நோய் காலத்திலும் உள்நாட்டு மோதல்களைச் சந்தித்துவரும் மக்களுடன் தான் ஒன்றித்திருப்பதாக திருத்தந்தை கூறினார்.

உலகெங்கும் போர் நிறுத்தம் நடைபெறுவதற்கு, ஐ.நா.வின் பாதுகாப்பு அவை, ஜூலை மாதத் துவக்கத்தில் மீண்டும் ஒருமுறை அழைப்பு விடுத்துள்ளதை தன் உரையில் குறிப்பிட்டத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கொரோனா



கிருமியால் உலகெங்கும் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இறந்துள்ள வேளையில், மக்களைக் கொல்லும் போர்கள் இன்னும் தொடர்வது, பெரும் கொடுமை என்று கூறினார்.

ஆர்மேனியா மற்றும் அசர்பைஜான் நாடுகளுக்கிடையே அண்மையில் உருவாகியுள்ள மோதல்கள், ஒரு போராக உருவாகும் ஆபத்து உள்ளது என்பதை குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்விரு நாடுகளுக்கிடையிலும் அமைதி நிலவ அழைப்பு விடுத்துள்ளார்.

# கடவுள், பெற்றோர், மற்றும், குழந்தைகள் மீது காட்டப்படும் அன்பு

**வத்திக்கான்**: கடவுள் மீதும், பெற்றோர்மீதும், குழந்தைகள் மீதும் காட்டப்படும் அன்பிற்கு இடையே இருக்கும் தொடர்பு, மற்றும், அது வழங்கும் கனிகள் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் கருத்துரைத்தார். .

'பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள அன்பு, இறைவன் மீது கொள்ளும் அன்பால் தூண்டப்பட்டு தூய்மையடையும்போது, அது முற்றிலும் கனி தருவதாக மாறி, குடும்பத்திற்குள்ளும், அதைத் தாண்டியும், நற்கனிகளைத் தருகிறது', என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியில் பதிவாகியிருந்தன.

இதற்கிடையே, வத்திக்கானில் இம்மாதத்தில் இடம்பெற்றுவரும், கோடைகால சிறார் முகாமிற்கு, முன்னறிவிப்பின்றி சென்ற திருத்தந்தை, அங்கு பயிற்சி பெறும் சிறார்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

விளையாட விரும்புபவர்கள், சுயநலவாதிகளாகவே இருக்கமுடியும் எனவும் சிறார்களிடம் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சிறார்களைச் சந்தித்தபின், அவர்களுக்குப் பயிற்சி வழங்கும் தன்னார்வப் பணியாளர்களையும் தனியாகச் சந்தித்து, தன் பாராட்டுக்களையும் நன்றியையும் வெளியிட்டார் திருத்தந்தை.

திருத்தந்தை கேட்டுக்கொண்டதன்பேரில், வத்திக்கான் பணியாளர்களின் குழந்தைகளுக்காக இம்மாதத் துவக்கத்தில் உருவாக்கப்பட்ட இந்தக் கோடை முகாமில், 5 வயதிற்கும் 14 வயதிற்கும் உட்பட்ட ஏறத்தாழ 100 சிறார்கள் கலந்துகொள்கின்றனர்.

இவர்கள், வத்திக்கான் தோட்டம், வத்திக்கான் ஹெலிகாப்டர் தளம் புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கம் ஆகியவற்றில், நீச்சல், டென்னிஸ், கால்பந்து, கூடைப்பந்து போன்ற விளையாட்டுக்கள், கல்வி கற்றல்,



இத்திங்கள் காலை, சிறார்கள் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தபோது, வத்திக்கான் புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கிற்குள் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒவ்வொரு சாப்பாட்டு மேசைக்கும் சென்று சிறார்களுடன் உரையாடியதுடன், அவர்களுக்கு ஒரு சிறு உரையும் நிகழ்த்தினார்.

சிறார்கள் அனைவரும் இம்முகாம் நேரத்தில், புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும், ஏனெனில், தனியாக செபித்தல், போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டு கோடை விடுமுறையை செலவிட்டு வருகின்றனர்.

வத்திக்கான் காவல்துறையின் ஆன்மீக குருவாக இருக்கும் அருள்பணி Franco Fontana அவர்களின் கண்காணிப்பில், தொன்போஸ்கொவின் சலேசியத் துறவுசபையின் ஒத்துழைப்புடன், இந்த சிறார் கோடை முகாம், வத்திக்கானுக்குள் நடத்தப்படுகிறது.

# உள்ளத்தில் நம்பிக்கையூட்டும் கடவுளின் பொறுமை

**வத்திக்கான்**: பயிர்களும், களைகளும் என்ற உவமை, இறைவனின் பொறுமையைப் பறைசாற்றி, நம் உள்ளங்களில் நம்பிக்கையை விதைக்கின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த ஞாயிறன்று வழங்கிய மூவேளை செப உரையில் கூறினார்.

**பயிர்கள் நடுவே களைகள் உவமை**

களைகளை அகற்றுவதற்கு அவசரம் காட்டிய பணியாளர்களிடம், அறுவடை நாள் வரை பொறுமையைக் கடைபிடிக்கச் சொன்ன நில உரிமையாளரைப்போல, கடவுளும் பொறுமைகாட்டுகிறார் என்பதை, திருத்தந்தை, தன் மூவேளை செப உரையில் சுட்டிக்காட்டினார்.

**களைக்கொல்லிகளால் பூமிக்கு நேரும் ஆபத்து**

களைகளை அகற்றுவதற்கு, இன்றைய உலகில் பயன்படுத்தப்படும் களைக் கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் ஆகிய நஞ்சுகளால், இந்த பூமிக்கும், பயிர்களுக்கும், நமக்கும் நாம் விளைவிக்கும் ஆபத்துக்களை நாம் சிந்திக்கவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வளாகத்தில் கூடியிருந்த மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

நல்ல குணங்கள், நற்செயல்கள் நிறைந்த உலகில், பொறாமையின் காரணமாக தீமைகளை விதைக்கும் அலகையின் செயல்பாடுகளை, இன்றும் நம் நடுவே காணமுடிகிறது என்று கூறிய திருத்தந்தை, ஒன்றுபட்டு வாழும் ஒரு குடும்பத்தில், பொறாமையின் காரணமாக, அவதூறுகள் விதைக்கப்பட்டு, அக்குடும்பம் பிளவுபடுவதை நாம் காண்கிறோம் என்ற எடுத்துக் காட்டையும் முன்வைத்தார்.

நல்லவர்களுக்கு நிறைவாழ்வளிப்பதும், தீயோரைத் தண்டிப்பதும், இறைவனை மட்டுமே சார்ந்தது என்று கூறி, திருத்தந்தை தன் மூவேளை செப உரையை நிறைவு செய்தார்.

# இறைஞானத்திற்கு இறைஞ்சுவோம்

பொதுக்காலத்தின் பதினேழாம் ஞாயிற்றுக் கிழமையான இன்றைய வாசகங்கள் தரும் சிந்தனை ‘இழத்தலில் தான் வாழ்வு உள்ளது’ என்பதாகும். நிறைய நேரங்களில் பெறுவதும், பெற்றுக்கொள்வதும் தான் வாழ்வு என நினைக்கின்றோம். ஆனால் உண்மையில் இழத்தலில்தான் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு அடங்கியிருக்கிறது என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு எடுத்துகூறுகின்றன.. நாம் அதைக் குறித்து சிந்தித்துப் பார்த்து நிறைவு செய்வோம்.

முதல் வாசகமானது, நாம் நினைத்த இலக்கை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சிறந்ததோர் ஆயுதம் எனலாம். ஞானம்தான் முதலிடம் வகிக்கிறது என்பதை நமக்கு அறிவுறுத்துகிறது. சாலமோனைப்போல், உலக நாட்டங்களில் ஆர்வம் கொள்ளாமல், கடவுளின் ஞானத்தைக் கொண்டு நற்பணிகள் ஆற்றும் வரம் கேட்போம்.

உலக நாட்டங்களான பணம், பட்டம், பதவி, ஆடம்பர வாழ்வு போன்றவை நிரந்தரமற்றவை. ஆனால் இதில்தான் நமது நாட்டம் மேலோங்கி உள்ளது. நீதிமொழிகள் நூலில், ‘ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்’ என எழுதப்பட்டுள்ளது.

நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு விண்ணரசை நிலத்தில் மறைந்திருக்கும் புதையலுக்கும் நல்முத்துவுக்கு ஒப்பிடுகின்றார். எப்படியென்றால் நிலத்தில் புதையல் இருப்பதை அறிந்த மனிதர் தன்னிடம் இருக்கின்ற அனைத்தையும் விற்றுவிட்டு அந்த நிலத்தை வாங்குகிறார். வணிகரோ நல்முத்தைக் கண்ட உடன் தன்னிடம் இருக்கின்ற அனைத்தையும் விற்றுவிட்டு அந்த நல்முத்தை வாங்கிக் கொள்கிறார். அதைப் போன்றுதான் விண்ணரசு என்பது ஒப்பற்ற செல்வமாகிய (புதையல், நல்முத்து) ஆண்டவர் இயேசுவை அடைவதற்கு உலக செல்வமாகிய பணம், பொருள், இன்பம் எல்லாவற்றையும் நாம் துறக்கவேண்டும். இவற்றையெல்லாம் துறக்காத ஒரு மனிதரால் இயேசுவையோ அல்லது அவர் தரக்கூடிய விண்ணரசைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பது உண்மையிலும் உண்மை.

ஆண்டவர் இயேசு, “கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்” என்று நமக்கு அறிவித்துள்ளார். (யோவான் 12: 24). அதுபோன்றுதான் கிறிஸ்தவர்களாகிய நாம் விண்ணரசை உரிமைச் சொத்தாகப் பெறுவதற்கு நம்மிடம் இருப்பதை ஏன் நம்மையே இழக்கத் தயாராகவேண்டும். அப்போதுதான் நாம் விண்ணரசைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு நாம் இறைவனிடத்தில் இறை ஞானத்தை பொழியுமாறு கேட்கவேண்டும். இன்றைய முதல் வாசகத்தில் சாலமோன் அரசர் பொன்னோ, பொருளோ கேட்கவில்லை, மாறாக ஞானத்தைக் கேட்டார். அதனால் இறைவனும் அவருக்கு நிறைவான ஞானத்தைத் தருகின்றார்.

ஆகவே நாம் பெறுவதில் அல்ல, இழப்பதில்தான் வாழ்வு இருக்கிறது என்பதை உணர்வோம். அப்படிப்பட்ட தெளிந்த வாழ்க்கை வாழ இறைஞானத்தைக் கேட்போம். இறைவனுக்கு உகந்த மக்களாக வாழ்வோம் அதன்வழியாக இறையருள் பெறுவோம்.

*-லூர்தம்மாள் -காஜாங்*

**பொதுக்காலம் 16-ஆம் ஞாயிறு**

அர 13: 5, 7-12
திபா 119:57,72.76-77.127-128.129-130
உரோ 8: 28-30
மத் 13: 13: 44-52

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 1**